# ஓய்வூதியர்கள் தரவுதளம்

# புதிதாக பதிவு செய்பவர்களுக்கான உதவி ஆவணம்

# https://tnpensioner.tn.gov.in

ஜனவரி 2019

தமிழ்நாடு அரசு
கருவூல கணக்குத்துறை ஆணையரகம்

தேசிய தகவலியல் மையம்
தமிழ்நாடு மாநில மையம்

## 1. ஆவணத்தைப் பற்றி

இந்த ஆவணமானது ஓய்வூதியர்கள் இணைய வழி மூலமாக அவர்களின் ஓய்வூதியம் தொடர்பான தகவல்களை பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியர்கள் தரவுதளத்தின் முதன்மை நோக்கம் வெளிப்படைத்தன்மையாக ஓய்வூதியதாரர்களின் விவரங்களை ஓய்வூதியதாரர்கள் இணையம் மூலமாக பாதுகாப்பான முறையில் வழங்குவதாகும்.

## 2. அடிப்படைத் தகவல்கள்

ஓய்வூதியர்கள் தரவுதளத்தின் முகப்புப் பக்கத்தை ஒரு வலைதள தேடுதல் கருவி மூலமாக (https://tnpensioner.tn.gov.in) என்ற முகவரியின் வழியாக அடையலாம்.



## 3. புதிதாக பதிவு செய்வதற்கான வழிமுறைகள்

ஓய்வூதியர்கள் தரவுதளத்தின் முகப்பு பக்கத்தில் உள்ள **புதிய பயனர்? இங்கே பதிவு செய்யுங்கள்** என்ற விருப்பத்தை தேர்வு செய்தால், ஓய்வூதியர்களின் விவரங்களை உள்ளீடு செய்வதற்காக புதிய பயனர் பதிவு என்ற படிவம் தோன்றும்.




இந்த படிவத்தில் முன்னீடு சொல், ஓய்வூதிய கொடுவை எண் (ஓய்வூதிய கொடுவை எண் **A 0123654** அல்லது **A0123654/EDN** என இருந்தால் முன்னீடு சொல் **"A"** ஓய்வூதிய கொடுவை எண்.**0123654** என மட்டும் உள்ளீடு செய்யவும். ஓய்வூதியதாரரின் பிறந்த தேதி அல்லது **10** இலக்கம் கொண்ட பான் கார்டு நம்பரை உள்ளீடு செய்யவும். ஓய்வூதியரின் கைபேசி எண்ணை உள்ளீடு செய்த பிறகு கடவு சொல்லை தங்கள் விருப்பம் போல் ( குறைந்தது 8 இலக்கமாகவும் அதிகபட்சம் 20 இலக்கங்கள் இருக்க வேண்டும்). மேலும் கடவு சொல்லில் குறைந்தது ஒரு எண் மற்றும் ஏதாவது ஒரு சிறப்பு குறியீடு (**# ? ! @ $ _ * ^ &**) கட்டாயமாக இடம் பெற வேண்டும். உதாரணமாக test_2019@) மீண்டும் விருப்பமாக தேர்வு செய்த கடவு சொல்லை உள்ளீடு செய்யவும். பிறகு திரையில் தோன்றும் குறியீட்டை உள்ளீடு செய்து சமர்ப்பிக்கவும்.

தாங்கள் உள்ளீடு செய்த முன்னீடு சொல், ஓய்வூதிய கொடுவை எண், பிறந்த தேதி அல்லது வருமான வரி நிரந்தர PAN கார்டு நம்பர் மின் ஓய்வூதியத்தில் பதிந்துள்ள விவரங்களுடன் ஒத்து இருக்காவிடில் திரையில் தாங்கள் உள்ளீடு செய்த விவரங்கள் தவறு என்ற செய்தி வரும். ஓய்வூதியதாரர்கள் தாங்கள் ஓய்வூதியம் பெறும் கருவூலத்தை அணுகி விவரங்களை சரி செய்து கொள்ளலாம். சமர்ப்பிக்கும் விருப்பத்தினை தேர்வு செய்து புதிதாக தேர்வு செய்த கடவு சொல்லையும் தங்களின் கைபேசி எண்ணையும் வருங்காலங்களில் உள்ளீடு செய்ய நினைவில் வைத்து கொள்ளவும்.




புதிதாக பதிவு செய்வதை நிறைவு செய்த பிறகு தங்களது முன்னீட்டு சொல், ஓய்வூதிய கொடுவை எண் மற்றும் கடவு சொல்லை கீழ்க்கண்டவாறு உள்ளீடு செய்யவும்.

இந்த படிவத்தில் முன்னீடு சொல், ஓய்வூதிய கொடுவை எண் (ஓய்வூதிய கொடுவை எண் A 0123654 அல்லது A0123654/EDN என இருந்தால் முன்னீடு சொல் "A" ஓய்வூதிய கொடுவை எண்.0123654 என மட்டும் உள்ளீடு செய்யவும்.

உள்ளீடு செய்த பிறகு ஓய்வூதியதாரர்கள் கீழ்க்கண்ட விவரங்களை ஓய்வூதிய தரவுதளத்தில் இருந்து பார்வையிட முடியும்.

1) ஓய்வூதியரின் விவரங்கள்
2) வாரிசுதாரர் நியமனம் பற்றிய விவரங்கள் (விவரங்கள் இருந்தால்)
3) மாதாந்திர ஓய்வூதிய விவரங்கள்
4) வருடாந்திர ஓய்வூதியம் பெற்ற விவரங்கள்
5) ECS முறையில் ஓய்வூதியதாரரின் வங்கி கணக்கிற்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்ட விவரங்கள்.
6) ஓய்வூதியத்தை தொகுத்து பெற்ற விவரங்கள் (விவரங்கள் இருந்தால்)
7) ஓய்வூதியதாரர்கள் 80 வயது நிறைவடைந்த பிறகு வழங்கப்படும் கூடுதல் ஓய்வூதியம் பற்றிய விவரங்கள்

## 4. கடவு சொல்லை மறந்தால் செய்ய வேண்டியவை

ஓய்வூதியதாரா் அவரால் உருவாக்கப்பட்ட கடவு சொல்லை மறந்து விட்டால் **"கடவுச்சொல்லை மறந்துவிட்டீர்களா?"** என்ற விருப்பத்தை தோ்வு செய்தால் கீழ்க்கண்ட விவரங்கள் திரையில் தோன்றும். ஓய்வூதியதாரா் விவரங்களை பூர்த்தி செய்து "சமா்ப்பிக்க" என்ற விருப்பத்தினை தோ்வு செய்யவும். புதிய கடவு சொல்லை பயன்படுத்தி ஓய்வூதியதாரா் தரவுதளத்தினுள் நுழையலாம்.




ஓய்வூதியதாரா்கள் தங்களது குறைகள் / சந்தேகங்களுக்கு அவா்கள் ஓய்வூதியம் பெறும் மாவட்ட / சாா்நிலை / அல்லது ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தை தொடா்பு கொள்ளலாம்.

### ஓய்வூதியம் அலுவலகம்

http://www.tn.gov.in/karuvoolam/ppolist.htm

### மாவட்ட கருவூலங்களுக்கு

http://www.tn.gov.in/karuvoolam/distlist.pdf

ஓய்வூதியம் தொடா்பான படிவங்கள் மற்றும் அரசாணைகள் ஆகியவை "படிவங்கள் மற்றும் அரசாணைகள்" என்ற மெனுவில் உள்ளது